2022 ஏப்ரல் 27]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும்முகத்தானும், விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)

முற்பகல் 10–05

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 182. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

182—

மாநகராட்சியாகத் தரம் உயர்த்துதல்

***11150—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி நகராட்சியுடன் அருகிலுள்ள பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளை இணைத்து தருமபுரி நகராட்சியை மாநகராட்சியாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தருமபுரி நகராட்சியை மாநகராட்சியாகத் தரமுயர்த்துவது தொடர்பான செயற்குறிப்பேதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் அரசின் பரிசீலனையில் இல்லையென்ற கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள். தற்போது, நாடு முழுவதும் நகரமயமாதல் அதிகரித்து வருகிறது. கிராமங்களில் வாழக்கூடிய மக்களெல்லாம், நகரத்தை நோக்கிச் சென்றால் வேலைவாய்ப்பு கிடைக்கும், தங்களுடைய குழந்தைகள் கல்வி பயில ஏதுவாக இருக்குமென்று நகரங்களை நோக்கிச் செல்கிறார்கள். அதேநேரத்தில், இன்னொன்றையும் நான் இங்கே பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நகரமயமாக்கலைக் குறைக்க வேண்டுமென்பது எல்லோருடைய எண்ணமாகவும் இருந்துகொண்டிருக்கிறது. அதில் எந்தவிதமான மாற்றுக்கருத்தும் இல்லை, மறுக்கவும் இல்லை. ஆனாலும்கூட, நகரமயமாக்கல் என்ற அடிப்படையில், 2003 ஆம் ஆண்டு, தருமபுரி நகராட்சியின் சார்பில், அருகில் உள்ள பகுதிகளையெல்லாம் இணைத்து மாநகராட்சியாக உயர்த்தலாம் என்ற கருத்துரு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. அதை அரசு பரிசீலிக்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், என் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்லுங்கள். மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் உள்ளாட்சிப் பகுதியின் மக்கள்தொகை, அதன் அடர்த்தி, வருவாய், வேளாண் சாராத பணிகளில் வேலைவாய்ப்பு பெறுவோரின் சதவிகிதம் மற்றும் பிற பொருளாதார காரணிகள் ஆகியவற்றின் அடிப்படையில், அத்தகைய பகுதிகளின் எல்லைகளில் எவ்வித மாற்றமுமின்றி ஒரு நகராட்சியாக அமைக்கப்படலாம் அல்லது அந்த உள்ளாட்சிப் பகுதி, நகராட்சிப் பகுதியுடன் இணைக்கப்படலாம். மேலும், 30 ஆயிரத்திற்கும் கூடுதலாக மக்கள்தொகை இருக்கும் ஓர் உள்ளாட்சிப் பகுதி மேற்குறிப்பிட்ட காரணிகளின் அடிப்படையில் பேரூராட்சியாக அமைக்கப்படும் என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவில் இருக்கின்ற அத்தனை நகர்ப்புரங்களைக்காட்டிலும் தமிழ்நாட்டில் நகர்ப்புர மக்கள்தொகை அதிகம். அதாவது, 2011 ஆம் ஆண்டு புள்ளிவிவர அடிப்படையிலே பார்த்தோம் என்றால், 48.45

2022 ஏப்ரல் 27]

சதவிகிதம். இப்போது இருக்கின்ற புள்ளிவிவர அடிப்படையில், 53 சதவிகித மக்கள்தொகை நகர்ப்புரத்தில் இருப்பதாக ஒரு கணக்கு இருக்கிறது. எனவே, நகரமயமாக்கலைக் கூடுதலாகக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணத்தில்தான் நம்முடைய தலைவர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 6 நகராட்சிகளை மாநகராட்சிகளாகத் தரமுயர்த்தினார்கள். 28 பேரூராட்சிகளை நகராட்சிகளாக உயர்த்தித் தந்தார்கள். இப்போது, ஊரக உள்ளாட்சித் தேர்தல் நடைபெற்று முடிந்திருக்கிறது. அதனுடைய தலைவர்கள் அங்கே பொறுப்பேற்றிருக்கின்றார்கள். அவர்களுடைய பதவிக்காலம் முடிகின்றவரை ஒரு பகுதியைப் பிரித்து வேறு பகுதியோடு இணைப்பது இயலாத காரியம் என்பது ஒன்று.

இரண்டாவது, நகர்ப்புர உள்ளாட்சித் தேர்தலும் இப்போது நடந்து முடிந்திருக்கிறது. எனவேதான், 90–க்கும் மேற்பட்ட பேரூராட்சிகள் எந்தெந்தப் பகுதிகளில் அமைக்கப்படலாம் என்ற கருத்துரு அரசிடம் இருக்கிறது. அதாவது, 20 ஆயிரம், 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள்தொகை இருக்கின்ற இடங்கள் மற்றும் 7 இலட்சம் ரூபாய், 8 இலட்சம் ரூபாய் வருமானம் வரக்கூடிய இடங்களையெல்லாம் பேரூராட்சிகளாக உயர்த்தலாம் என்ற கருத்துருவும் அரசிடம் இருக்கின்றது. அனைத்து பகுதிகளையும் ஆராய்ந்து, தமிழகம் முழுவதும் ஒரு நிலை எடுக்கப்பட வேண்டுமென்பதற்காக அதிகாரிகள் குழு அமைத்து, எந்தப் பகுதியை எதனோடு இணைக்கலாம் என்று அவர்களுடைய கருத்தைப் பெற்று அமைக்கலாம். நான், தற்போது பரிசீலனையில் இல்லையென்று சொல்வதற்குக் காரணம், அதற்கான வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, தேவைக்கேற்றபடி, குழுவினுடைய கருத்தை அறிந்து, அதிகாரிகள் சொல்வதைக் கேட்டு தரமுயர்த்தலாம். நகராட்சியை மாநகராட்சியாகத் தரமுயர்த்துவதில் எங்களுக்கு எந்தவிதமான சங்கடமும் இல்லை. ஆனால், அங்கு எவ்வளவு வருவாய் வருகின்றது, மக்கள்தொகை எவ்வளவு என்பதைக் கணக்கெடுத்துதான் செய்ய முடியும். எனவே, அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியான காரணங்களை இங்கே*

விளக்கமாகச் சொல்லியிருக்கிறார்கள். அதை நான் மறுக்கவில்லை. நகரமயமாதல், மாநகராட்சியாகத் தரமுயர்த்துவது சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உள்ளாட்சித் துறை அமைச்சராக, துணை முதலமைச்சராக இருந்த நேரத்தில், நாங்கள் பல கோரிக்கைகளை வைத்தோம். குறிப்பாக, ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி, தஞ்சாவூர் மற்றும் வேலூர் போன்ற நகராட்சிகளை மாநகராட்சிகளாகத் தரமுயர்த்த வேண்டுமென்று கேட்டு, அவை நடைமுறைக்கு வந்தன. அப்போதுகூட, சென்னை பெருநகர மாநகராட்சியை 3 ஆக பிரிக்க வேண்டுமென்று நாங்கள் அவர்களிடம் சொன்னோம். அதாவது, அம்பத்தூர், தாம்பரம் என்று பிரிக்க வேண்டுமென்று கேட்டோம். சற்று காலந்தாழ்த்தினாலும்கூட, தற்போது, புதிய மாநகராட்சியாக உருவாக்கியிருக்கிறீர்கள். அது வரவேற்கக்கூடிய ஒன்றாகும். மேலும், ஒசூர், வேலூர் மற்றும் சேலம் ஆகிய மாநகராட்சிகளெல்லாம் நலிந்த நிலையில், பொருளாதார நெருக்கடி சூழலில் இருக்கின்ற காரணத்தினால், மேற்கண்ட மாநகராட்சிகளை மேம்படுத்துவதற்கு, விரைந்து கூடுதலாக நிதி ஒதுக்கப்படுமா என்பதை நான் இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது, தருமபுரி நகரில் மக்கள்தொகை கிட்டத்தட்ட 60,611 ஆகும். ஆண்டு வருமானம் 24 கோடி ரூபாய் என்றிருக்கிறது. ஏற்கெனவே அங்கிருக்கின்ற பேருந்து நிலையம் இடைஞ்சலாக இருக்கின்ற காரணத்தால், அதை விரிவுபடுத்த வேண்டுமென்று ஒரு சாராரும், அந்தப் பேருந்து நிலையத்தை தேசிய நெடுஞ்சாலையில் மாற்றி அமைக்கலாம் என்று ஒரு சாராரும் கூறுகிறார்கள். அந்தக் கருத்துருவும் இருக்கிறது. எனவே, அதைப்பற்றி ஆராய்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய அனுமதியைப் பெற்று, தேவையான திட்டங்களைக் கொண்டுவந்து தருமபுரி மாவட்டத்தை ஒரு சிறப்பான நிலைக்குக் கொண்டுவருவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். தங்கப்பாண்டியன் அவர்கள்.*

2022 ஏப்ரல் 27]

முற்பகல் 10–10

திரு. எஸ். தங்கப்பாண்டியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையம் நகராட்சி, 42 வார்டுகளைக் கொண்ட பெரிய நகராட்சியாக உள்ளது. இந்த நகராட்சி, சுமார் 1,26,000 வாக்காளர்களையும், 2,63,000 மக்கள் தொகையும் கொண்ட நகராட்சியாக இருக்கிறது. எனவே, ராஜபாளையம் நகராட்சியின் அருகிலுள்ள தெற்குவங்கனூர் மற்றும் மேலப்பாடு கரிசல்குளம் ஊராட்சிகளை இணைத்து மாநகராட்சியாகத் தரம் உயர்த்தித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து உறுப்பினர்களும் தங்கள் பகுதியை பேரூராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்றும், பேரூராட்சியாக இருப்பதை நகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்றும், நகராட்சியில் மக்கள்தொகை அதிகமாக இருக்கிற இடத்தை மாநகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்றும் விருப்பப்படுகிறார்கள். அதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டு, அதிகாரிகள் மூலமாக வருவாய் மற்றும் மக்கள்தொகையின் அடிப்படையிலே கணக்கெடுத்து, மாநகராட்சியாகத் தரம் உயர்த்தப்படுவதால் ஏற்படுகின்ற செலவுகளை கணக்கிடும் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. எனவே, அந்தப் பணிகள் முடிந்த பிறகு, அவர்கள் தருகிற அறிக்கையின்படி, அதைப் பற்றி பரிசீலிக்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன் அவர்கள்.*

திரு. செ. சுந்தரராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய தலைவர் திரு. எடப்பாடி ஐயா அவர்களை வணங்குகிறேன். சங்ககிரி தொகுதியில் 5 பேரூராட்சிகள் இருக்கின்றன. அதில், இரண்டு பேரூராட்சிகளான இடங்கணசாலையும், தாரமங்கலமும் நகராட்சிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. அங்கே குடிநீர்ப் பற்றாக்குறையால் மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். இந்த குடிநீர்ப் பற்றாக்குறையை*

தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், தேவூர், அரசிராமணி, சங்ககிரி ஆகிய 3 பேரூராட்சிகளில், ஏதாவது ஒரு பேரூராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தின் மூலமாக அப்பகுதி மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க சேலம் மாவட்டத்தினுடைய பொறுப்பு அமைச்சர் மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றுமுன்தினம் சேலம் மாவட்டத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பது குறித்து ஆய்வு செய்யப்பட்டு, கிட்டத்தட்ட 6 மாத காலத்தில், நாலரை இலட்சம் மக்களுக்குக் குடிநீர் வழங்குகிற திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கியிருக்கிறார்கள். நீங்கள் குறிப்பிட்ட பகுதியிலே சாலை விரிவாக்கப் பணிகளும், குழாய்கள் பதிக்கும் பணிகளும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எனவே, அந்தப் பணிகள் முடிவடைந்தவுடன், உங்களுக்குக் கூடுதலாக குடிநீர் வழங்குவது குறித்து பரிசீலிக்கப்படும். இப்போது ஊரகப் பகுதிகளிலே 100 நாள் வேலை திட்டம் செயல்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. நாங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் 'பேரூராட்சிப் பகுதிகளில் இருக்கிற மக்களெல்லாம் 100 நாள் வேலைத் திட்டத்திலே எங்களுக்குப் பணி வழங்க வேண்டுமென்று கேட்கிறார்கள்' என்று சொன்னவுடன், கடந்த ஆண்டு 100 கோடி ரூபாய் சிறப்பு நிதியாக வழங்கப்பட்டு, தமிழ்நாடு முழுவதும் இருக்கிற பேரூராட்சிகளில், 24 பேரூராட்சிகளில் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. 2, 3 நகராட்சிகளிலும் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மாநகராட்சிப் பகுதிகளில் உள்ள வார்டுகளில் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பகுதியிலே, இந்த ஆண்டு ஏதாவது ஒரு பேரூராட்சியை எடுத்து, அந்தத் திட்டம் நிறைவேற்றித் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. V.P. கந்தசாமி அவர்கள்.

திரு. V.P. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூலூர் தொகுதிக்குட்பட்ட கருமத்தம்பட்டி பேரூராட்சி,

2022 ஏப்ரல் 27]

தற்போது நகராட்சியாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கிறது. புதிதாகத் தரம் உயர்த்தப்பட்ட நகராட்சியின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு, சிறப்பு நிதி ஒதுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆண்டு சிறப்பு நிதியாக 1,000 கோடி ரூபாயை நகராட்சிகளுக்கும் மற்றும் பேரூராட்சிகளுக்கும் இந்த அரசு வழங்கியிருக்கிறது. அதில், 550 கோடி ரூபாய் நகராட்சிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. 450 கோடி ரூபாய் பேரூராட்சிகளுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, தாங்கள் சொல்கின்ற நகராட்சியிலே அவசியமான பணி இருக்குமாயின், நிச்சயமாக உங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்து தரப்படும் என்ற உறுதியை தருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை என்பது, முதன் முதலாக திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக திரு. ப.உ. சண்முகம் அவர்கள் நகரமன்றத் தலைவராக பதவிக்கு வந்த ஊர். ஆகவே, திருவண்ணாமலை நகராட்சியை, மாநகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டும். அதுவும் குறிப்பாக, ஆன்மிக மக்கள் அதிகளவில் ஒவ்வொரு பௌர்ணமி அன்றும் திருவண்ணாமலையில் கிரிவலம் சென்று வருகிறார்கள். எனவே, அதிகளவில் பக்தர்கள் வந்து செல்லக்கூடிய, உலகளவிலே புகழ்பெற்ற திருவண்ணாமலை நகராட்சியை, மாநகராட்சியாகத் தரம் உயர்த்தித் தர வேண்டும். குறிப்பாக, அமைக்கப்பட்டுள்ள குழுக்கள் தேர்தல் வரும்பொழுதுதான் அவற்றைப் பிரிக்கின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், அந்த நேரத்தில் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. ஆகவே, இப்போதே மாநகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளை எல்லாம் தரம் உயர்த்துவதற்கான பணிகளை குழுக்கள்மூலம் செய்வதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

[2022 ஏப்ரல் 27

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களும், நீங்களும் சேர்ந்து திருவண்ணாமலையை மாநகராட்சியாகத் தரம் உயர்த்த வேண்டுமென்று சொன்னால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து, அதற்குண்டான பணிகளை நாங்கள் செய்வோம். நீங்கள் சொல்வதைப்போல, தேர்தல் வருகிறபோது அல்ல, இப்போதே அந்தப் பணியைத் தொடங்கவிருக்கிறோம். கிட்டத்தட்ட 40,000 மக்கள்தொகை கொண்ட ஊராட்சிகளெல்லாம் இருக்கின்றன. ஆனால் அதிகமான வருவாய் வருகின்ற பகுதிகளை பேரூராட்சிகளாகத் தரம் உயர்த்துகின்றபொழுது, 100 நாள் வேலைத் திட்டம் செயல்படுத்தப்படவில்லை என்று மக்களெல்லாம் எதிர்ப்புத் தெரிவிக்கிறார்கள். அதில்தான் சங்கடமே தவிர, வேறு ஒன்றுமில்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல அந்தப் பணி இப்போதே தொடங்கி, விரைவிலே அந்தப் பணியை செய்து முடிப்போம், அது உங்களுக்கு வந்து சேரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஸ்டாலின் குமார், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

183—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***14251—திரு. செ. ஸ்டாலின் குமார்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துறையூர் தொகுதியில் இருபாலர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?